*22.08.2025*

***SC No. 580 / 2018*** ***PW.8.***ரேகசௌந்தர்

எதிரி ஆஜரில்லை. பிரிவு *317* குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**இந்நீதிமன்ற Crl.MP.No. 1965/2025, நாள் 13.08.2025 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :

சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் தேதியில் நான் அந்த கல்லூரியில் படித்து வந்தேன் என்பதைக் காட்டுவதற்கான ஆவணங்களை போலிசாரிடம் காண்பித்தேன். ஆனால் கொடுக்கவில்லை. அன்றைய தினம் 26.09.2017 ம் தேதி நான் கல்லூரிக்கு வந்திருந்தேன் என்பதைக் காட்டும் ஆவணங்களை நான் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. காயம்பட்ட எங்கள் துறைத் தலைவரை எனக்கு நன்கு தெரியும். கல்லூரியில், எங்களுக்கு நன்னடத்தை சான்றிதழ் மற்றும் internal mark போன்றவற்றிற்கு துறைத்தலைவரின் தயவு தேவை என்றால் சரியல்ல. நான் அதே கல்லூரியில் Phd படித்து வந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. துறைத்தலைவரின் வேண்டுகோளின் பேரில் தான்,நான் நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் காவல்நிலையத்தில் இருந்து எனக்கு சம்மன் கொடுக்கவில்லை. சீனியர் மனையழகன் தான் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். நான் கையொப்பம் செய்த ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னது போல், எதிரியை வடபழஞ்சி பஸ் நிலையத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும், என் முன்னிலையில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் துறைத்தலைவர்

வேண்டுகோளின் பேரில் உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலிசார் ஒருமுறை தான் விசாரணை செய்தார்கள். 26.06.2019 ம் தேதி நான் கல்லூரியில் படிக்கவேயில்லை என்றும், கல்லூரிக்கு நான் செல்லவில்லை என்றும், அசா1 எனக்கு தெரிந்த நபர் என்றும் அதனால் அவருக்கு ஆதரவாக, உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல், சொன்ன விதத்தில், எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணை சாட்சியம் அளிக்கும் போதும், இன்றைய தினமும், என்னோடு, அசா1 வந்தார் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை